# NATURAL RESOURCES FOR TOURISM IN JAFFNA.

Jeevatharani Rajayogapoopathy
Assistant Lecturer, Department of History, University of Jaffna.
Jeevatharani1993@gmail.com

**Abstract**

Tourism is a rapid growing phenomenon and has become one of the largest industries in the world. The impact of tourism is extremely varied. The introduction of tourism will imply an increased stress on resources available and the tourism industry is very resource- and land intensive. The Sri Lankan tourism industry plays a key role in regional development. Sri Lanka is a glorious paradise in the world. It has been popular because of its geographical location. Jaffna is one of the district of Northern Province of Sri Lanka. Jaffna district has more tourist potentials. Tourism image in Northern Province had changed by war during the last three decades. But the war is mostly over, and Sri Lanka is now stable, and increasing helps a lot. So this time is better to develop the districts. Therefore I selected for the research this title. This research analyses the natural resources for regional development of tourism industry in Jaffna district. Tourist industry develops and contributes to the regional development and sustainable development. Information was gathered through visit to tourist areas, conducting interviews and relevant documents. SWOT analysis and descriptive statistical analysis were used for the result. The finding of research reveals that Jaffna district can benefit much more than present context of tourist industry. The many potentials for tourism were identified. That can improve the regional development. If Jaffna district has concentrate more on natural tourism, it can benefit from the tourist industry without endangering its social, cultural and environmental values.

**Keyword**: Tourism, Resources, Natural, Jaffna.

**அறிமுகம்.**

சமகால உலகில் வளர்ச்சியடைந்து வருகின்ற சுற்றுலாத்துறையானது அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் பிரதேச, பொருளாதார அபிவிருத்தியில் அதிகளவான பங்களிப்பினைச் செய்கின்றது. சுற்றுலா என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்பட்டாலும் ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலாத்துறை நிறுவனம் சுற்றுலா என்றால் என்ன என்பாற்கு பின்வருமாறு கூறுகின்றது, “சம்பளம் பெற்றுக்கொள்ளும் எந்த செயற்பாட்டுடனும் தொடர்பில்லாத பொழுதுபோக்கு, வணிகம் மற்றும் வேறு நோக்கங்களுக்காக 24 மணித்தியாலங்களுக்குக் குறையாமலும், தொடர்ச்சியாக ஒரு வருடத்திற்கு மேற்படாமலும் தமது வழமையான சுற்றுச் சூழலுக்கு வெளியே சென்று அங்கு தங்குதல்” எனக் குறிப்பிடுகின்றது. பொதுவாக சுற்றுலா என்பது “தான் வாழ்ந்துவரும் பிரதேசத்தில் இருந்து வேறோரிடத்திற்கு சென்று தங்கி மகிழ்ந்து புத்துணர்வு பெற்று மீளுதல் என்பதே இதன் மையப்பொருளாகும்.

தென்னாசியாவில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்றாக உள்ள இலங்கையானது அமைவிடரீதியில் இந்துசமுத்திரத்தின் முத்தாகவும்,தனித்தீவாகவும் காணப்படுவதுடன் பல்வேறுபட்ட காலநிலைகளையும் வெவ்வேறுபட்ட மாவட்டங்களில் கொண்டுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நாடாகும். சுற்றுலாவிற்கு சாதகமான இயற்கை வளங்கள், கலாச்சார வளங்கள், போன்ற அம்சங்களைக் கொண்டுள்ளது. இவை சுற்றுலாப் பயணிகளை இலங்கையை நோக்கி இழுக்கும் மூலவளங்களாகக் காணப்படுகின்றன. இலங்கையின் பொருளாதாரத்தில் விரைவாக மாற்றத்தினை ஏற்படுத்தி வரும் துறையாக சுற்றுலாத்துறை காணப்படுவதுடன் அதிகளவு அன்னியச் செலாவணியை பெற்றுத்தரும் துறையாகவும் காணப்படுகின்றது. இதனால் அரசானது ஏனைய துறைகளைக் காட்டிலும் சுற்றுலாத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது.

இலங்கையின் சுற்றுலாத்துறையானது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பல வருடங்களாக வீழ்ச்சி நிலையை எதிர்நோக்கியது. இருப்பினும் 2009 ஆம் ஆண்டு 447,890 ஆக இருந்து 2014 ஆம் ஆண்டு 1,500,198 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளனர். 2017இல் சுற்றுலாப் பயணிகளினுடைய வருகை 2.1 மில்லியனை எட்டியுள்ளது. (Sri Lanka Tourism Development Authority, 2017). இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி சபை

(SLTDA) 2020இல் நான்கு மில்லியன் சுற்றுலாப் பயணிகளினை இலங்கை நோக்கி வருவதை ஊக்குவித்தலை தமது இலக்காக கொண்டுள்ளது.

சுற்றுலாவானது வருகை தருகின்ற சுற்றுலாப்பயணிகளின் நோக்கம், தன்மை என்வற்றின் அடிப்படையில் பலவகைப்படுகின்றது. அவ்வகையில் கல்விச்சுற்றுலா, மருத்துவச்சுற்றுலா, இன்பச்சுற்றலா, கலாச்சாரச் சுற்றுலா, மரபுரிமைச்சுற்றுலா போன்ற வகையிலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் வளங்களையும் வாய்ப்புக்களையும் இலங்கை கொண்டுள்ளது. இவ்வாறான வளங்கள் கலாச்சாரம் சார்ந்தவையாகவும், இயற்கை சார்ந்தவையாகவும் காணப்படுகின்றது. இலங்கை முழுவதும் இயற்கைசார்ந்த வளங்களை பெருமளவில் கொணடடிருந்ததுடன் சுற்றுலா ரீதியில் சிறப்புப்பெறும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இயற்கை சார்ந்த வளங்கள் சிறப்பாகவே காணப்படுகின்றன. இவ் இயற்கைசார் வளங்கள் சுற்றுலாப் பயணிகளை யாழ்ப்பாணம் நோக்கி கவர்ந்திழுப்பதற்கு காரணமாகின்றது. இவ்வாறு இயற்கை சார்வளங்கள் ,இயற்கை சார்ந்த சுற்றுலா (Natural based tourism), சூழல் சுற்றுலா வண்மை (Eco Tourism) எனவும் அழைக்கப்படுகின்றது.


**மரபுரிமைகள்**

மரபுரிமைச் சுற்றுலா தனித்தன்மை வாய்ந்தது. பண்பாட்டு மரபுரிமை வளங்கள் கடந்தகால நிகழ்வுகள், புராதன கட்டங்கள், வரலாற்றுச் சின்னங்கள், புராதன நகரங்கள், கிராமியப் பண்பாடுகளும் அதன் தோற்றப்பாடுகளும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் உருவமுள்ள பண்பாட்டு மரபுரிமைச் சொத்துக்களும், உருவமற்ற பண்பாட்டு மரபுரிமைச் சொத்துக்களும் உள்ளடங்குகின்றன.

ஒரு சமுதாயத்தின் மரபுரமை கலாசார சொத்து என்பது அதன் வரலாற்றை உண்மையாக உணரக்கூடிய வழிமுறையாகும். மரபுரிமை என்பது எமது முன்னைய சந்ததியிடமிருந்து கொண்டுவரப்படுவதாகும். இது எமது முன்னோர்களால் வைத்திருக்கப்பட்ட உருவமற்ற சொத்து அல்லது கலைகள் அல்லது சம்பிரதாயங்களால் கொண்டுவரப்படும் நடைமுறைகள், கட்டிடங்கள், சமூகம், கலாசாரம் போன்றவற்றிற்கு முக்கியமானதாக கருதப்படும் வரலாற்று நம்பிக்கைகள் போன்றவற்றைக் குறிக்கும். பண்பு, அடையாளம், கலாசார வேறுபாடுகள் என்பன காலந்தோறும் கட்டியெழுப்பப்படும். இவற்றின் கலவை ஓர் இடத்தில் மரபுரிமை உருவாக்கப் பயன்படும்.

மரபுரிமை என்றால் என்ன என்பது தொடர்பாக அறிஞர்கள் காலத்துக்குக் காலம் வெவ்வேறுபட்ட விளக்கங்களை கொடுத்து வருகின்றனர். அறிஞர்களில் ஒரு சாரார் ''மரபுரிமை என்பது ஒரு குழுவால் அல்லது சமூகத்தால் பின்பற்றப்பட்டதும் நிகழ்காலத்தில் தொடர்ந்து பராமரிக்கப்படுவதும் எதிர்காலத்தில் அடுத்த சந்ததியினருக்கு கொடுக்கப்படுவதனையும் குறிப்பிடுகின்றனர்." இன்னொருசாரார் ''கடந்தகால சமூகத்தால் காலந்தோறும் கட்டியெழுப்பப்பட்ட நடத்தை, பண்பு, அடையாளம், கலாசார வேறுபாடுகள் என்பனவற்றின் கலப்பே ஒரு பிரதேசத்தின் மரபுரிமை தோற்றத்திற்கு காரணமாகின்றது.

மரபுரிமை சொத்துக்களினை அவற்றின் இயல்புகளினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறாக வகைப்படுத்தலாம். மனிதனால் உருவாக்கப்பட்டவை மற்றயதை இயற்கையில் தானாக தோன்றியவை அல்லது இயற்கையினை அடிப்படையாகக் கொண்டவை. இயற்கையினை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டு மரபினை மலைஉச்சிகள், ஆறுகள், காடுகள், மழைக்காடுகள் போன்றனவும் உள்ளடங்குகின்றன.




**இலங்கையின் சுற்றுலாத்துறைக்கான வளங்கள்**

இலங்கையில் உள்ள இடங்கள் மிகவும் கவர்ச்சிகரமானதாகவும் எல்லோராலும் விரும்பப்படுகின்ற பௌதீக வளங்களைக் கொண்டுள்ளது. இலங்கை ஒரு தீவாகக் காணப்பட்டாலும் அதன் அமைவிடம், பௌதீக பண்பாட்டுக் காரணிகளின் சாதகத்தன்மை, இதமான காலநிலை காணப்படுகின்றன. அத்தோடு உலகமரபுரிமைச் சின்னமாக ருேநுளுஊழு னால் எட்டு இடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஆறு கலாசஸ்சார மரபுரிமைத் தளங்கள் இரண்டு இயற்கை மரபுரிமைத்தளங்கள். அதற்கு வாய்ப்பான பகுதிகளாக **கடற்கரைகள்** : ஹிக்கடுவ, வெலிகம, மாத்தறை, தங்காலை, பெந்தோட்டை, அம்பலாங்கொடை, அறுகம்குடா, நிலாவெளி, திருகோணமலை, சாட்டி, கஜேரினா, மணற்காடு **பாரம்பரிய இடங்கள்**: கண்டி-தலதா மாளிகை, உலக பாரம்பரிய இடம், கடலாதெனிய, அனுராதபுரம்- இசுறுமுனிய, பொலநறுவை-கல்விகாரை, தங்கக்கோயில், சிவதேவாலயம், சிகிரியா, காலி- கோட்டை,தம்புள்ளை- ராக்குடவரை கோயில், கொழும்பு- தேசியநூதன சாலை, நுவரெலியா- சீதா அம்மன் கோயில், அம்பாறை- இந்துக்கோயில் **வன விலங்கு:** யால தேசிய பூங்கா, உடவளவை தேசியபூங்கா, வில்பத்து தேசிய பூங்கா, மின்னேரியா தேசிய பூங்கா, குமண தேசிய பூங்கா, **இயற்கையழகு:** நீர்வீழ்ச்சி- பம்பரகந்தை, துன்கிந்த, இறம்பொடை, டேவன், நியலும, லக்ஸபானா, இராவணன் **தாவரவியல் பூங்கா** ராயல ஹக்கல **புராதன இந்துக்கோயில்** :நல்லூர், மடு, நயினாதீவு, செல்வச்சந்நிதி, கதிர்காமம், திருக்கோணேச்சரம் நடனம் -கண்டி நடனம், சப்ரகமுவ நடனம் **விளையாட்டு:** வெள்ளை தண்ணீர் படகு-ஹித்துல்கல, வெள்ளை மணற்பரப்பு கடற்கரை, அறுகம்குடா, படகு -பெந்தோட்டை பகுதி, நடைபயணம் - நக்கில்ஸ், மணற்றொடர், ஹட்டன் சமவெளி

**யாழ்ப்பாணம்**

இலங்கையின் வட பகுதியில் யாழ்ப்பாண மாவட்டம் அமைந்துள்ளது. இது கொழும்பிலிருந்து 410 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. ஏழு தீவுகளை உள்ளடக்கிய ஓர் குடாநாடாகும். வடக்கு, கிழக்கு, மேற்கு

எல்லைகளாக இந்துசமுத்திரத்தைக் கொண்டுள்ளது. அதே வேளை தெற்குப் பக்கமாக யாழ்ப்பாண கடல்நீரேரி, கிளிநொச்சி மாவட்டமும் அமைந்துள்ளன. மொத்த நிலப்பரப்பு 101,201சதுர கிலோமீற்றர். யாழ்ப்பாண மாவட்டமானது வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாத்துறையினை பொறுத்தவரை யாழ்ப்பாணத்தில் 30 வருட கால யுத்த முடிவின் பின்னரே பல்வேறுபட்ட அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதிகள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளாகவோ அல்லது வழிகளிலான நிதிகளினூடாகவோ உள்வாங்கப்படுகின்றது. இங்கு சுற்றுலாத்துறையினையும் விருந்தோம்பல் துறையினையும் விருத்தி செய்யும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் வட மாகாணசபையினால் மேற்கொள்ளப்பட்டது.

**யாழ்ப்பாணத்தின் இயற்கைசார் வளங்கள்**

- காலநிலை வளங்கள்

காலநிலை ஒரு இயற்கைச் சுற்றுலா வளமாகும். காலநிலை மாற்றங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுற்றுலாத்துறையின் போக்கினை மாற்றியமைக்க கூடியவை. காலநிலை என்பது குறிப்பிட்டதோர் காலத்தில் நிலவும் வளிமண்டல நிலைமைகளின் சராசரித் தொகுப்பாகும். காலநிலை மூலக்கூறுகளில் வெப்பநிலை, மழைவீழ்ச்சி, அமுக்கம், காற்று,ஈரப்பதன் எனபன முக்கியமானது.

யாழ்ப்பாண மாவட்டம் உஷ்ண பிரதேச வரட்சி நிலையை உடைய மாவட்டமாகும். உச்ச மழைவீழ்ச்சி ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் காலம் வரையும் அதாவது வடக்கு கிழக்கு பருவநிலை மாற்றத்தினால் அவ்வப்போது ஏப்ரல் தொடக்கம் மே வரையும் மழைவீழ்ச்சி காணப்படும்.இடைநிலைக் காலத்திற்கான மழை நிச்சயமற்றதொன்றாகும். 2018இல் இம் மாவட்டம்1,120.80 மில்லிமீற்றர் மழையைப் பெற்று சாதாரண வெப்பநிலை 20.80 – 34.30 சென்ரிகிரேட்டுக்கும் உட்பட்டதொன்றாக அமைவதோடு சாதாரண சராசரி வெப்பநிலை 28.06 செனரிகிரேட்டாகும். (வருடாந்த செயலாற்றுகை மற்றும் கணக்குகள் அறிக்கை – 2018)

- பறவைகள் சரணாலயங்கள்.

சுற்றுலாவிற்குரிய இயற்கை வளங்களில் ஒன்றாக பறவைகள் சரணாலயங்கள் விளங்குகின்றன. இயற்கை பரிணாம வளர்ச்சி சீராக நடைபெற எந்தெந்த உயிரினம் எந்தெந்த இடத்தில் உள்ளதோ அந்த இடத்தில் அவை இயல்பாக வாழ, வளர அனுமதியளிப்பவை சரணாலயங்களாகும். யாழ்குடா நாட்டின் உள்ளேயும், வெளியேயும் காணப்படும் கடல்நீரேரிகளும் இயற்கையையொட்டி வளரும் கண்டல் தாவரங்களும் பறவைகளுக்கு உவப்பான இயற்கை சூழலாக அமைந்துள்ளன. பருவகால மாற்றங்கள் ஏற்படும் போது தென்னிலங்கையிலிருந்து வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான பறவை இனங்கள் யாழ்குடா நாட்டுக்கு வருகை தருகின்றன. குறிப்பாக தொண்டமானாறு ஏரி, வல்லைவெளி, சரசாலை, குருவிக்கூடு, மண்டைதீவு போன்ற இடங்களில் பல வகைப் பறவையினங்கள் காணப்படுகின்றன.

சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம்

சரசாலை பறவைகள் சரணாலயம்

மண்டைதீவு பறவைகள் சரணாலயம்

- கடல் நீரேரிகள்

கடற்காயல்கள் அல்லது வாவி அல்லது களப்பு எனப்படுவது கடல்சார்ந்த எரியாகும். கடலிருந்து சிலவகையான தடுப்புக்களால் பிரிக்கப்பட்டுள்ள தாழ்ந்த கடல்நீர் அல்லது உவர்நீர்ப்பரப்பாகும். கடல்நீரேரி பெருமளவு சுற்றுலாப்பயணிகளை கவருகின்ற வகையில் சிறப்பான அமைவிடத்தைக் கொண்டுள்ளது. இலங்கைத்தீவில் 15க்கு மேற்பட்ட கடல்நீரேரிகள் காணப்படுகின்றன. வடமாகாணத்தைப்பொறுத்தவரை 8பிரதான கடல்நீரேரிகளும் சிறுகடல்நீரேரிகளும் காணப்படுகின்றன. இத்தகைய கடல்நீரேரிகளில் யாழ்ப்பாண மாவட்டத்துக்குரியதான

கடற்காயல்களாக வடமராட்சி கடல்நீரேரி, சுண்டிக்குளம், உப்பாறுகடல்நீரேரி, யாழ்ப்பாணகடல்நீரேரி, கூழாறுகடல்நீரேரி போன்றன சிறப்பானவையாகும்.

❖ முருகைக்கற்பாறைகள்

முருகைக்கல் அல்லது பவளப்பாறை எனப்படும் இப்பாறைகள் சுண்ணாம்புக்கல் எனவும் அழைக்கப்படுகின்றன. இது கடல்வாழ் நுண்ணுயிராலும் உருவான பாறையாகும். யாழ்குடாநாடானது 400 சதுரமைல் பரப்பில் கூடிய பங்கு சுண்ணக்கல்லினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. மயோசின் காலத்தில் கடல் மேலுயர்த்தப்பட்டதாகும். இது படர்ந்து கடற்கரையில் நீண்டு காணப்படுகின்றது. மேற்குக் கரையிலிருந்து சுண்டிக்குளம் வரை பரந்துள்ளது. யாழ்ப்பாணத் தீவுப்பகுதிகளில் அதாவது காரைதீவு, ஊர்காவற்துறை, வேலணை,மண்டதீவு மேற்கு, நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு முதலான பகுதிகளில் முருகைக்கற்பாறைகள் நிறைந்துள்ளன. கடற்கரைப் பகுதிகளில் பாறை வெளியரும்பிக் காணப்படுதல் ஓங்கல் பாறைகள் எனப்படுகின்றன. ஓங்கல்களை தொண்டமானாறு கடலினை அடையும் பகுதியிலிருந்து 200யார் கிழக்கே காணமுடிகின்றது.

❖ மண்டபக்காடு

கெருடாவில் தெற்குப் பகுதியில் பல இடங்களில் பாறைகள் திமிர் கொண்டது போல மண்படையின் மேல் காணப்படுகின்றது. சில இடங்களில் மண்ணே தெரியாதவாறு இந்த வெளியரும்புப் பாறைகள் நீட்டிநிமிர்ந்து காணப்படுகின்றது. அதிகமாக இடங்களில் சிறிய பெரிய துளைகளாகவும் புனல் வடிவ பள்ளங்களாகவும் பரம்பிக் காணப்படுகின்றது. கெருடாவிலில் சுண்ணாம்புக்கற்பாறைத் தொடரை சிதைத்தும்,செதுக்கியும் உருவாக்குவதாக இயற்கையாக அமைந்திருக்கும் பெரிய மண்டபக்குகை, அதன்மேல் கூரையில் அகன்ற பெரிய வாயைக் கொண்டுள்ளது. இதன் விசாலமான பகுதி 50 அடிகள் உள்விட்டத்தையும் நிலமட்டத்திலிருந்து 25 அடிகள் வரையில் ஆழத்தையும் கொண்டுள்ளது.

❖ வழுக்கியாறு

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரேயொரு ஆறாகும். இது ஒரு பருவகால ஆறு. இது தெல்லிப்பளையில் உருவாகி தென்மேற்காக கந்தரோடை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களை கடந்து கடலில் கலக்கின்றது. பருவ மழைக்காலங்களில் பொங்கி வழிந்தோடும் சிறிய ஆறாகும். இக் காலங்களில் பல்வேறு உள்நாட்டு பறவைகளையும் நாடு விட்டு நாடு புலம் பெயர் பறவைகளையும் கண்டுரசிக்கலாம்.

❖ குளங்கள்

வன்னியைப் போன்று பெருங்குளங்கள் யாழ்ப்பாணத்தில் காணப்படவில்லை ஆயினும் குடாநாட்டின் வடபகுதிகளில் காணப்படுகின்றன. நெல் பயிரிடப்படும் பிராந்தியங்களில் நீரைத்தேக்கி வைக்க ஓரளவு பெரிய குளங்கள் அமைக்கப்பட்டாலும் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் சிறிய குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் யாழ்ப்பாண இராசதானியுடன் தொடர்புபடுத்திக் கூறப்படும் பாணன்குளம், பண்டாரக்குளம், சங்கிலியன் குளம் என்பன சிறப்பாக குறிப்பிடத்தக்கது.

❖ துறைமுகங்கள்

யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற இயற்கை வளங்களில் முதன்மையானவை துறைமுகங்களாகும். இவை முக்கிய வருவாய்தரும் இடங்களாகவும் விளங்கின. ஜம்புகோளப்பட்டினம் பிரதான துறைமுகங்களில் ஒன்றாக விளங்கியது. வரலாற்றுக் காலத்திலே இது சிறப்புப் பெற்று விளங்கியதை சங்கமித்தையின் வருகை எடுத்துக்காட்டுகின்றது.பண்டைய வெளிநாடு, உள்நாடு வர்த்தக மார்க்கத்தில் பருத்தித்துறை,வல்வெட்டித்துறை,காங்கேசன்துறை, ஊர்காவல்துறை, கச்சாய், கொழும்புத்துறை, நாவாந்துறை, மயிலிட்டித்துறை, அராலித்துறை, பண்ணைத்துறை ஆகிய துறைமுகங்களில் மும்முரமாக வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தீவுப்பகுதிகளிலும் பலதுறைமுகங்கள் காணப்படுகின்றன. குறிகட்டுவான்,

கழுதைப்பட்டி, புளியடித்துறை(புங்குடுதீவு), பண்ணைத்துறை, மாவிலித்துறை, நயினாதீவுத்துறை, அனலைதீவு, எழுவைதீவு, மண்டைதீவு துறைமுகங்கள் குறிப்பிடத்தக்கன.

❖ மணற்குன்றுகள்

குடாநாட்டின் கிழக்கு, தென்கிழக்கு பிரதேசங்களில் காணப்படும் மணற்குன்றுகள் குடாநாட்டின் முக்கிய தரைத்தோற்ற உறுப்பாகவுள்ளது. இவை யாழ்ப்பாண சுற்றுலாத்துறையின் முக்கிய அம்சமாகத் திகழ்கின்றன. கிழக்குக் கரையோரங்களில் பல்வேறு மட்டங்களில் சிறிதும் பெரிதுமான மணற்குன்றுகள் காணப்படுகின்றன. இவ்மணற்படிவுகள் கடலலைகள், நீரோட்டங்கள் போன்றவற்றினால்கரையோரங்களில் படியவிடப்பட்டு பின்னர் பருவக்காற்றின்போது உள்நாடு நோக்கி நகர்த்தப்படுகின்றன. வடமராட்சி கிழக்கு கரையோரப்பகுதிகளில் மட்டுமே மணற்குன்றுகள் வெளிப்படையாகக் காணப்படுகின்றன.வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் மண்காடு, குடத்தனை,அம்பன், நாகர்கோயில், போன்ற இடங்களில் செறிவான மணற்குன்றுகள் தொடரலை வடிவில் காணப்படுகின்றன. இப்பகுதிகளே சுற்றுலாப்பயணிகளால் கவரப்பட்ட மணற்குன்றுகளாக விளங்குகின்றன.

❖ தீவுகள்

உலகளாவிய ரீதியில் வளர்ந்து வரும் சுற்றுலாத்துறையில் முக்கியமான இயற்கை வளமாக தீவுகள் முதன்மை பெறுகின்றன. தீவுகள் சுற்றுலாவுக்கென இயற்கை கொடுத்த கொடை எனலாம். தீவுகள் என்பது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலத்திணிவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள தீவுப்பகுதிகள் பெருமளவில் இயற்கை எழில் மிக்க பிரதேசங்களாக விளங்குகின்றன. இலங்கையின் 25 மாவட்டங்களுக்கு இல்லாத தனித்துவம் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு காணப்படுகின்றது. அதாவது இங்கு சிறப்பான தீவுகள் காணப்படுகின்றமை பிரதானமாக எட்டுத்தீவுகளும் அதனுடன் இணைந்து சிறு சிறு தீவுகளுமாக ஏறத்தாழ 14 தீவுகள் காணப்படுகின்றன. அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணைதீவு ஏழும் ஒரே தொடராக யாழ்குடா நாட்டின் தெற்கே அமைந்துள்ளன. நயினாதீவு, நெடுந்தீவு இரண்டும் இன்றைய காலத்தில் சுற்றுலாரீதியில் சிறப்புப்பெற்றுக் காணப்படுகின்றன. நயினாதீவு, நாகபூசணிஅம்மன் ஆலயம், புத்த விகாரை, ஐதீகக்கதைகள் போன்றவற்றினால் சிறப்புப்பெறுகின்றன. நெடுந்தீவு குதிரைகள், பெருக்குமரம், குதிரைலயங்கள், கல்வேலிகள்,வாடிவீடு, பெரியதுறை போன்ற அம்சங்கள் சுற்றுலாப்பயணிகளை பெருமளவில் கவருகின்றன.

❖ கடற்கரைகள்

கடற்கரைகள் என்பது கடலோரம் அமைந்திருக்கும் நிலப்பகுதியாகும் அல்லது நிலப்பகுதிகளையோட்டி அமைந்திருக்கும் கடல் அல்லது கடலின் எல்லையைக் குறிப்பதே கடற்கரை எனப்படும். இன்பச்சுற்றுலாப்பயணிகளை பெருமளவில் கவருகின்ற இயற்கை வளங்கள் இதுவாகும். இவ்வகையில் யாழ்ப்பாணத்தில் கசூர்னா கடற்கரை மமள பண்ணை, கோவலம் கடற்கரை போன்றவை சிறப்பாகும்.

முடிவுரை.

மனஅழுத்தங்களுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் வாழுகின்ற மனிதர்களுக்கு அவற்றில் இருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் மனித சமுகத்தை ஒன்றிணைக்கவும் சுற்றுலா உதவுகின்றது. மன அமைதிக்காகவும் இன்பத்திற்காகவும் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில் குறிப்பாக இலங்கையைப் பொறுத்தவரையில் 2017ம் ஆண்டு மனமகிழ்வுகாகவும் விடுமுறைக்காகவும் பயணிக்கும் சுற்றுலாப்பயணிகள் 83% மாக அமைகின்றது.(Sri Lanka Tourism Development Authority, 2017).இவ்வகையில் சுற்றுலாப் பயணிகளை கவர்கின்ற வகையில் சிறப்புபெறும் வளங்களில் இயற்கைசார் வளங்கள் சிறப்பானவை. அவற்றில் இலங்கை பிரதான சுற்றுலா வலயங்களில் ஒன்றாக விளங்கும் வட பிரதேசம் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இயற்கை சார்வளங்கள் சிறப்பாகவே காணப்படுகின்றன. இவ் இயற்கைசார் வளங்களை அழிவடையாது பேணிப்பாதுகாப்பதோடு அவற்றை முழுமையாக சுற்றுலாக்குரிய முறைமையில் மாற்றியமைப்பதற்கு பல்வேறு செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

- விடுதிகள்,தங்குமிடங்கள் அமைக்கப்பட வேண்டும்.
- போக்குவரத்து வசதிகள் மேன்மைப்படுத்தப்பட வேண்டும்.

- இயற்கைசார் வளங்களை ஊக்குவித்தல்
- சுற்றுலா மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- சுற்றுலா வழிகாட்டிகள் நியமிக்கப்பட வேண்டும்.
- சுற்றுலா சார் நிறுவனங்கள் சிறப்புற செயற்பட வேண்டும்.
- சுற்றுலாக்குரிய மையங்கள் அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளவதோடு இயற்கைசார் வளங்களை சுற்றுலாவுக்குரிய வகையில் மாற்றியமைப்பதோடு பிராந்திய சுற்றுலாத்துறை வளர்ச்சியை அதிகரிக்க முடியும். யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் 17.09.2019 அன்று பலாலி விமானநிலையம் திறக்கப்படுகின்றமை சுற்றுலாத்துறையை பொறுத்தவரை மிகப்பெரும் வரப்பிரசாதமாகும்.

உசாத்துணைகள்

1. இராஜேஸ்' வரன்,S., "யாழ்ப்பாணக்குடாநாட்டின் உள்நாட்டுக் கடல்நீரேரியுருவங்கள்" சிந்தனை,1999, ப 74-77.
2. ஜெயப்பிரிபா.ஜெ, "சூழலியல்சார் சுற்றுலா"" யாழ்ப்பாணப்புவியிலாளன் யாழ்ப்பாணம் இதழ் 20 2006-2007 ப 88-95.
3. குகபாலன் கா., "இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் துறையின் அண்மைக்கால போக்குகள்", யாழ்ப்பாணபுவியியலாளன் 2004 ப 74-81.
4. சயந்தா சி., "இலங்கையின் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறையின் பங்கு", யாழ்ப்பாணபுவியியலாளன் 2012-2014 ப 95-03.
5. தங்கமணி.ம.இரா, "சுற்றுலாவியல் ஓர் அறிமுகம், கரூர், இந்தியா.
6. www.sltda.gov.lk
7. www.jaffna.dist.gov.lk